(ஒன்பதாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 18.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2023 ஏப்ரல் 26, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1674/2023

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மாவட்டத்தில் உள்ள முருங்கன் வைத்தியசாலை 2018 ஆம் ஆண்டு ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்ட போதிலும், மேற்படி வைத்தியசாலைக்குத் தேவையான வசதிகள் இற்றைவரை வழங்கப்படவில்லை என்பதையும்;

(ii) மருத்துவர்கள் உட்பட மேற்படி மருத்துவமனைக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் தற்போது பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வைத்தியசாலையில் பிரேத அறை இன்மையால் சடலங்களை மன்னார் பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டியிருப்பதனால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், முருங்கன் வைத்தியசாலைக்கு பிரேத அறையை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) முருங்கன் வைத்தியசாலையின் அபிவிருத்திப் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1755/2023

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கைத்தறி நெசவு ஆடை உற்பத்திக்காக பயன்படுத்தப்படுகின்ற இயந்திரங்கள் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(ii) இன்றேல், மேற்படி இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள இயந்திரங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) கைத்தறி நெசவு ஆடை உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்களை இறக்குமதி செய்ய ஆண்டுதோறும் செலவிடப்படும் தொகை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1799/2023

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தில் பெருமளவில் கறவை மாடு வளர்ப்பு மேற்கொள்ளப்படுகின்றதென்பதையும்;

(ii) கறவை மாடுகளுக்கு உணவைப் பெற்றுக்கொள்வதில் பால் பண்ணையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதோடு வனப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் வன சீவராசிகள் உத்தியோகத்தர்களுடன் அடிக்கடி மோதல்களும் ஏற்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், கறவை மாடுகளின் உணவுக்குப் பொருத்தமான மேய்ச்சல் தரைகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

1808/2023

கௌரவ அஜித் மான்னப்பெரும,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹா மாவட்டத்தின், கொட்டதெனியாவ கிராமத்தை மையமாகக் கொண்டு கடந்த சில ஆண்டுகளாக பல்வேறு குற்றச் செயல்கள் இடம்பெற்று வருகின்றதென்பதையும்;

(ii) இக்கிராமத்தில் பல்வேறு குற்றச் செயல்கள் தற்போது இடம்பெறுவதால் அங்கு வசிக்கும் மக்கள் பீதியடைந்துள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இந்த நிலைமையினைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

2528/2023

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை புகையிரத நிலையத்தில் பிரயாணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் புகையிரதப் பெட்டிகளின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி புகையிரதப் பெட்டிகள் எவ்வளவு காலமாக பிரயாணத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன;

(iii) மேற்குறிப்பிட்ட புகையிரதப் பெட்டிகள் மிகவும் பழமையானவையாகவும் தற்போது பயன்படுத்த முடியாத நிலையிலும் காணப்படுவதை அறிவாரா;

(iv) இலங்கையில் ஏராளமான புகையிரத நிலையங்களுக்கு நவீன புகையிரதப் பெட்டிகள் மற்றும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளபோதிலும் திருகோணமலை புகையிரத நிலையத்துக்கு நவீன புகையிரதப் பெட்டிகள் மற்றும் இயந்திரங்கள் வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(v) திருகோணமலை புகையிரத நிலையத்தினையும் இப்புகையிரத நிலையத்துக்கு வழங்கப்பட்டுள்ள புகையிரப் பெட்டிகளையும் நவீனமயப்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

2573/2023

கௌரவ டீ. வீரசிங்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை நெல் சந்தைப்படுத்தல் சபையினால் எத்தனை மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு கிலோ கிராம் நெல் கொள்வனவு செய்யப்பட்ட விலை தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) இன்றளவில் நெல் சந்தைப்படுத்தல் சபையின் வசமுள்ள நெல் இருப்பின் அளவு யாதென்பதையும்;

(ii) நெல் சந்தைப்படுத்தல் சபையானது சதொச மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாத்திரம் நெல் வழங்குகின்றதா என்பதையும்;

(iii) இன்றேல், தனியார் துறையினருக்கும் நெல் வழங்குகின்றதா என்பதையும்;

(iv) நெல் சந்தைப்படுத்தல் சபை விலங்குத் தீவனத்திற்காக நெல் வழங்குகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

2620/2023

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பௌத்த மறுமலர்ச்சி நிதியத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய ஊழல் செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

2689/2023

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022/2023 ஆம் ஆண்டிற்கான பெரும்போகத்தின் நெல் அறுவடை நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதனால் நெல் கொள்வனவு செய்வதற்காக தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாது என்பதையும்;

(ii) ஒரு ஏக்கர் காணியில் நெற் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்கு செலவாகும் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) நெல்லின் விலையைத் தீர்மானிக்கும்போது மேற்படி தொகை அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) தனியார் வியாபாரிகளினால் மிகக் குறைந்த விலையில் நெல் கொள்வனவு செய்யப்படுவதை நிறுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) நெல்லின் மூலம் அரிசி அல்லது வேறு உற்பத்திகளை மேற்கொண்டு இலங்கையில் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கும், ஏற்றுமதி சந்தையை மேம்படுத்துவதற்கும், விவசாயிகளுக்கு சலுகைகளை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

2841/2023

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க வைத்தியசாலைகளில் தற்போது சேவையாற்றுகின்ற தாதி அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அரசாங்க தாதிச் சேவையில் தற்போது காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

2878/2023

கௌரவ யதாமிணீ குணவர்தன,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களால் இலங்கைக்கு அனுப்பப்படுகின்ற நிதியின் அளவானது கடந்த மூன்று தசாப்தங்களுக்கு முன்பிருந்ததை விட இன்றளவில் உயர் பெறுமதியைக் கொண்டுள்ளது என்பதனை அறிவாரா என்பதையும்;

(ii) எண்ணிக்கை அளவில் அதிகளவான இலங்கையர்கள் தொழில் புரிகின்ற பத்து வெளிநாடுகளும் பத்து நகரங்களும் தனித்தனியாக யாவை என்பதையும்;

(iii) எண்ணிக்கை அளவில் அதிகளவான இலங்கையர்கள் பணம் அனுப்புகின்ற பத்து வெளிநாடுகளும் பத்து நகரங்களும் தனித்தனியாக யாவை என்பதையும்;

(iv) இலங்கைக்கு கூடுதலாக பணம் அனுப்புகின்ற பத்து வெளிநாடுகளும் பத்து நகரங்களும் தனித்தனியாக யாவை என்பதையும்;

(v) வெளிநாடுகளிலிருந்து பணம் அனுப்புவதற்காக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வங்கிகள் அல்லது நிதி நிறுவனங்கள் உள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்கப் பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— சிறப்புரிமை,— பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மீறப்பட்டுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ செஹான் சேமசிங்க அவர்கள் 2023 மார்ச் 10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 118 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளின் கீழ் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

2.

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"ஆச்சார்ய பூஜ்ய ஹாரிஸ்பட்டுவே அரியவங்ஷாலங்கார மாஹிமி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2023 ஏப்ரல் 17 ஆம் திகதிய 2328/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் மற்றும் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*2.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நீட்டிக்கப்பட்ட நிதி வசதியின் (EFF) கீழான ஏற்பாட்டினை அமுல்படுத்துவதற்கான தீர்மானம்,— 23/0727/604/058-1 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான 2023 ஏப்ரல் 17 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், இலங்கைப் பொருளாதார மீட்புக்கான விரைவான நிலைமாற்றத்தினை அடைவதற்காகவும் அதனைத் தொடர்ந்து இலங்கை மக்களுக்கும் எதிர்காலச் சந்ததியினர்களுக்கும் நலன் பயக்கும் நிலைபெறுதகு பொருளாதார வளர்ச்சியை அடைவதற்காகவும் SDR 2.286 பில்லியனுடன் (சுமார் 3.0 பில்லியன் ஐ.அ. டொலர்கள்) இலங்கைக்காக 48 மாத கால நீட்டிக்கப்பட்ட நிதி வசதியொன்றிற்காகச் (EFF) சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டதும், 2023 மார்ச் 22 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுமான இந்த ஏற்பாட்டினை அமுல்படுத்துவதற்குத் தேவைப்படுகின்ற சகல அங்கீகாரமும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுக்கு வழங்கப்பட வேண்டுமென இப்பாரளுமன்றம் தீர்மானிக்கின்றது.

*3.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்,— நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2021),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.01.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.10ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*4.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— இலங்கை போக்குவரத்துச் சபையின் வருடாந்த அறிக்கை (2019),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(2)(c) ஆம் பிரிவின் கீழ் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை போக்குவரத்துச் சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(போக்குவரத்து அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.02.03 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*5.

கமத்தொழில் அமைச்சர்,— ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2021),— 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் 2023.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*6.

கமத்தொழில் அமைச்சர்,— நெல் சந்தைப்படுத்தல் சபையின் வருடாந்த அறிக்கை (2016),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2022.09.01 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய நெல் சந்தைப்படுத்தல் சபையின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*7.

கமத்தொழில் அமைச்சர்,— நெல் சந்தைப்படுத்தல் சபையின் வருடாந்த அறிக்கை (2019),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2023.02.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய நெல் சந்தைப்படுத்தல் சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கமத்தொழில் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.07 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*8.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கை தேயிலைச் சபையின் வருடாந்த அறிக்கை (2020),— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் 253 ஆம் அத்தியாயத்தின் கீழ் 2022.11.26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை தேயிலைச் சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்டக் கைத்தொழில் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.01.19 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.02.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*9.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— பனை அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை (2016),— 1975 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தென்னை அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் கீழ் 2022.12.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2016.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய பனை அபிவிருத்திச் சபையின் 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்டக் கைத்தொழில் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.01.19 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.02.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*10.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— பனை அபிவிருத்திச் சபையின் வருடாந்த அறிக்கை (2017),— 1975 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1971 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, தென்னை அபிவிருத்திச் சபைச் சட்டத்தின் கீழ் 2022.12.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2017.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய பனை அபிவிருத்திச் சபையின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்டக் கைத்தொழில் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.01.19 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.02.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*11.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை (2020),— 1979 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்டக் கைத்தொழில் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.01.19 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.02.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*12

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மற்றும் கைத்தொழில் அமைச்சர்,— களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை கம்பெனி லிமிடட்டின் வருடாந்த அறிக்கை (2019/2020),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் 2022.11.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.03.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய களுபோவிட்டியான தேயிலைத் தொழிற்சாலை கம்பெனி லிமிடட்டின் 2019/2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(பெருந்தோட்டக் கைத்தொழில் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.01.19 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.02.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*13.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனியின் வருடாந்த அறிக்கை (2017),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2017.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனியின் 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்சக்தி மற்றும் வலுசக்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.09 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*14.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனியின் வருடாந்த அறிக்கை (2020),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2023.01.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2020.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய வரையறுக்கப்பட்ட இலங்கை நிலக்கரி (தனியார்) கம்பனியின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்சக்தி மற்றும் வலுசக்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.09 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*15.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்,— வரையறுக்கப்பட்ட இலங்கை அணுசக்தி சபையின் வருடாந்த அறிக்கை (2019),— 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவின் கீழ் 2022.10.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2019.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய வரையறுக்கப்பட்ட இலங்கை அணுசக்திச் சபையின் 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்சக்தி மற்றும் வலுசக்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினால் 2023.03.09 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.03.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

16.

களனி பௌத்த மகளிர் தருமச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

17.

இலங்கை வரிவிதிப்பு நிறுவகம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*18.

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*19.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2023 சனவரி 01 ஆம் திகதிய 2312/76 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.04.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*20.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— சிவில் விமான சேவைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைச் சட்டத்தின் 6(3)(அ) மற்றும் 31 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 117(2)(ட) ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 26 ஆம் திகதிய 2303/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*21.

துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்,— சிவில் விமான சேவைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 2010 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சிவில் விமான சேவைச் சட்டத்தின் 117(2) மற்றும் 117(3) ஆம் பிரிவின் கீழ் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2022 நவம்பர் 02 ஆம் திகதிய 2304/46 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.03.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரிவிடல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

இலங்கை மத்திய வங்கி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

விலங்கின நலம்பேணல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

கப்பற்றொழில் முகவர்களுக்கு, சரக்கனுப்புநர்க்கு, கலன்செயற்படுத்தாப் பொதுக்காவுநர்க்கு மற்றும் கொள்கலன் செயற்படுத்துநர்க்கு உரிமமளித்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர்,— தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (469 ஆம் அத்தியாயமான) தாவர, விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2இ, 5 மற்றும் 5அ ஆகிய பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அக் கட்டளைச் சட்டத்தின் 71 ஆம் பிரிவின் கீழ் வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய 2292/11ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2023.02.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*28.

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய 2296/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.10.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

29.

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306ஏ-தேசிய அபிவிருத்தி மன்ற நம்பிக்கை நிதியம் (கூட்டிணைத்தல்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்தல் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

புகையிலை வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

வைட் றோஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

ரொசான் ரணசிங்க ஜனசஹன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

மனித உரிமைகள் அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

சிவில் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

சமாதானம், கல்வி வலுவூட்டல் மற்றும் அபிவிருத்தியிற்கான விளையாட்டு நிறுவகம் (SPEED) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

அவசரகால பொதுச் சுகாதாரச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

ஸ்ரீ பாலாபிவூர்தி வர்தன சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

39.

சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

40.

கிழக்கு மீளெழுச்சி அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

41.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

42.
சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

43.
தென்னிலங்கை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தலைமைத்துவப் பயிற்சிபீடம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

44.
சஹன சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

45.
சமாதி தியான மன்றும் யோகாசன நிலையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

46.
றுஹுணு உதானய அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

47.
“மாத்தறைப் பருவம்” அமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

48.
இலங்கை காப்புறுதி நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

49.
விவாக (பொது) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

50.
முஸ்லிம் திருமணம், மணநீக்கம் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

51.
தஸ்ஸனா பௌத்த சன்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

52.
இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

53.
திருமணப் பதிவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

54.
திருமணத்திற்கான ஆகக்குறைந்த வயது சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

55.
தொழில் வல்லுனர்களின் சமூக சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

56.
பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

57.
மாகாணசபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.